# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 20/2009

Deposition of **P.W.4** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 09.01.2025 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : P. சுரேஷ்குமார் | Father's Name | : பச்சமுத்து |
| Village | : வளையமாதேவி | Taluk | : ஆத்தூர் |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் | Age | : 40 |

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

துவக்க நேரம்: 11.50 A.M.

வாதி தரப்பில் முதல் விசாரணை

1. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. வளையமாதேவி கிராம சர்வே எண். 127/2A, 127/2B1, 127/2B2 மற்றும் 127/3A ஆகிய சர்வே எண்கள் தொடர்பாக இடத்தை பார்வையிட்டு அதன் அருகில் உள்ள இடங்களையும், மேற்படி சர்வே எண்களில் உள்ள தென்னை மரங்களின் வயதையும் பார்வையிட்டும், மேலும் நில அமைப்புகளை பார்வையிட்டு மேற்படி சர்வே எண்கள் குறித்த வருவாய் துறை ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அதன் பொருட்டு சாட்சியம் அளிக்க எனக்கு உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. அழைப்பாணை உள்ளது.

2. நீதிமன்ற உத்தரவின்படி நான் கள ஆய்வு செய்து தற்பொழுது வருவாய் துறை ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்பொழுது மேற்கண்ட 4 சர்வே

எண்களுக்கும் உண்டான புல வரைபடம், அ பதிவேடு, கிராம சிட்டா, அடங்கல் ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் பின்வருமாறு நீதிமன்ற ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | ஆவணம் | தன்மை | வகைபாடு |
|---|---|---|---|
| 1 | சர்வே எண். 127/2A, 127/2B1, 127/2B2 மற்றும் 127/3A-க்கான அ பதிவேடு | சான்றிட்ட நகல் | Ex-X1 |
| 2 | சர்வே எண். 127/2A, 127/2B1, 127/2B2 மற்றும் 127/3A- க்கான புல வரைபடம் | சான்றிட்ட நகல் | Ex-X2 |
| 3 | சர்வே எண். 127/2B1 - க்கான கிராம சிட்டா (பட்டா எண்.737) | சான்றிட்ட நகல் | Ex-X3 |
| 4 | சர்வே எண். 127/3A - க்கான கிராம சிட்டா (பட்டா எண்.585) | சான்றிட்ட நகல் | Ex-X4 |
| 5 | சர்வே எண். 127/2B2 - க்கான அடங்கல் | சான்றிட்ட நகல் | Ex-X5 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3. மேற்கண்ட வருவாய் துறை ஆவணங்களில் அ பதிவேடும், புல வரைபடமும் நிரந்தர பதிவேடுகள் என்றால் சரிதான். மேற்படி பதிவேடுகளில் கிராம நிர்வாக அதிகாரியாக நான் தன்னிச்சையாக திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. புது உரிமையாளர் வரும்பொழுது வட்டாட்சியர் உத்தரவின் பேரில் கிராம சிட்டாவில் பெயர் மாற்றம் செய்வோம் என்றால் சரிதான். அந்த நிலத்தை அப்பொழுதைக்கு யார் பயிர் செய்கிறார்களோ அவர்கள் பெயரில் அடங்கல் வழங்குவோம் என்றால் சரிதான்.

4. அ பதிவேடு என்பது அரசால் நில மேம்பாட்டு திட்டம் கடந்த 29.02.1984-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். இதனை அப்பொழுதைய தனி வட்டாட்சியர் திரு பரமசிவம் என்பவர் தயாரித்துள்ளார் என்றால் சரிதான். அதே போல்

நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புல வரைபடமும் முதன் முதலாக உருவாக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. ஒரு சர்வே எண் 2-ஆக உட்பிரிவு செய்யப்படும்பொழுது அது நில அளவையரின் அளவீட்டிற்கு பிறகு அவரது அறிக்கையின் பேரில், வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் புல வரைபடத்தில் உட்பிரிவுகளை தனித்தனியாக காண்பித்து புல வரைபடம் தயார் செய்வோம் என்றால் ஆமாம். உட்பிரிவு செய்யப்படும்பொழுது அது குறித்த புல வரைபடம் தயார் செய்யப்படும்பொழுது புல வரைபடத்தில் உட்பிரிவு செய்யப்பட்ட தேதி குறிப்பிட்டு நில அளவையர் கையொப்பமிடுவார் என்றால் ஆமாம்.

6. நான் ஒப்படைத்துள்ள சர்வே எண்.127 புல வரைபடத்தில் நில அளவையர் ஏதேனும் புதியதாக உட்பிரிவு செய்து அதன் பொருட்டு மேற்குறிப்பு எதுவும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 127-க்கான புல வரைபடம் கடந்த 1984-ல் எவ்வாறு தயார் செய்யப்பட்டதோ அதே நிலையில்தான் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளாமல் இன்று வரை உள்ளது என்றால் சரிதான்.

7. சர்வே எண்.127/2A என்பது பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பாதை என்பதற்கு புல வரைபடத்தில் பாதையை குறிப்பதற்கான தொடர் புள்ளிகள் (------ என்பதாக) குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் ஆமாம். இவ்வாறு தொடர் புள்ளிகள் வைத்து குறிப்பிடப்பட்டிருந்தால் வண்டிப்பாதை (அ) தார்சாலை என்று பொருள்படும் என்றால் ஆமாம்.

8. அதேபோல் சர்வே எண். 127/2A என்பது அ பதிவேட்டில் பாதை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சர்வே எண்ணுக்கான புல வரைபடத்தில் தென்வடலாக செல்வது தார் சாலை என்றால் ஆமாம். தார் சாலையின் கிழபுறத்தில் ஒரு வண்டிப்பாதை பிரிந்து செல்கிறது என்றால் சரிதான். இதன் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண். 127/2B1 ஆகும். ஆனால் சர்வே எண்.127/2B1 பட்டா என்று

குறிப்பிடப்பட்டுள்ளது.

9. சர்வே எண் 127-க்கான புல வரைபடத்தில் சர்வே எண். 127/3A வும் வண்டிப்பாதையாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் அ பதிவேட்டில் அது பட்டா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி என்றால் சர்வே எண் 127/2B1, 127/3A ஆகிய இரு சர்வே எண்களிலும் செல்லும் வண்டிப்பாதை, பட்டா நிலத்தில் செல்வதாக பொருள்படும் என்றால் ஆமாம்.

10. சர்வே எண். 127/2B1 யார் பெயரில் உள்ளது என்றால் பச்சமுத்து மகன்கள் , ராஜ்மோகன்-1, ராஜ்குமார்-2, வடிவேல் பிள்ளை மகன் சரவணன்-3, ராமசாமி கவுண்டர் மகன் பழனியப்பன் - 4, ராமசாமி கவுண்டர் மகன் கந்தன் - 5 ஆகிய ஐவர் பெயரிலும் உள்ளது, ஆனால் கடந்த 1984-ஆம் ஆண்டு அ பதிவேட்டில் ஆரிய கோனார் மகன் தங்கவேல்-1, வடிவேல் பிள்ளை -2, ஆறுமுகப்பிள்ளை -3 ஆகிய மூவர் பெயரில் மட்டும் இருந்துள்ளது. சர்வே எண்.127/3A யார் பெயரில் உள்ளது என்றால் வடிவேல் பிள்ளை மகன் சரவணன்-1, ராமசாமி கவுண்டர் மகன் பழனியப்பன்-2, ராமசாமி கவுண்டர் மகன் கந்தன் -3 ஆகிய மூவர் பெயரிலும் உள்ளது.

11. சர்வே எண்.127/2 என்பது தற்பொழுது சர்வே எண். 127/2A, 127/2B1, 127/2B2 என 3 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 127/2A-ன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஏர்ஸ் 2.00 (அ) ஏக்.0.05 செண்ட் ஆகும். சர்வே எண். 127/2B1 -ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் ஏர்ஸ் 3.00 (அ) ஏக்.0.07 செண்ட் ஆகும். 127/2B2 -ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் ஏர்ஸ் 96.5 (அ) ஏக்.2.38 செண்ட் ஆகும்.

12. சர்வே எண். 127/2A, 127/2B1, 127/2B2 ஆகிய 3 சர்வே எண்களையும் கூட்டினால் மொத்த விஸ்தீரணம் ஏக். 2.51 என்றால் சரிதான். புல வரைபடத்தில் கண்டுள்ள தடம் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது என்றால் சரிதான். தென்வடலாக செல்லும் தார்சாலையிலிருந்து கிழக்கு திசை நோக்கி பிரியும்

சாலை எதுவரை சென்று முடிவடைகிறது என்றால் ராமசாமி கவுண்டர் மகன்கள் பழனியப்பன், கந்தன் நிலத்தில் சென்று முடிவடைகிறது. கிழக்காக பிரிந்து செல்லும் சாலை மேலும் கிழக்காக சென்று தென்புறமாக திரும்பி அதன் பிறகு முடிவடைகிறது என்றால் சரிதான்.

13. பழனியப்பன், கந்தன் இருவரும் சகோதரர்களா என்றால் ஆமாம். பழனியப்பன், கந்தன் ஆகிய இருவரின் நிலங்களுக்கு செல்வதற்கு வேறு பாதை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

<u>**1, 5, 6** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

14. தாவா சொத்தை பார்வையிட்டுதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்தான சர்வே எண் 127/2B1-ல் உள்ள பாதை இன்றைய தேதியில் எத்தனை அடி அகலம் இருக்கும் என்றால் தோராயமாக 10 அடி இருக்கும். பாதையின் தென்புற கரையில் எத்தனை தென்னை மரங்கள் உள்ளன என்றால் தென்னை மரங்கள் உள்ளன, எண்ணிக்கை தெரியவில்லை. தென்னை மரங்களின் வயது எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 10-12 ஆண்டுகள் மரமாக இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும், இவ்வழக்கு தாக்கல் செய்யும்பொழுதே தென்னைமரங்களின் வயது 12-ற்கு மேல் இருக்கும் என்றாலும், தற்பொழுது தென்னை மரங்களின் வயது 25-30 வயது இருக்கும் என்றால் சரியல்ல, நான் சொன்னதுதான் சரி.

15. கிழக்கே செல்லும் தாவா பாதை பட்டா நிலத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.127/2B-ன் உரிமையாளர், உரிமை வழங்கப்படாத நபர்களின் பெயர்களை வருவாய் துறை ஆவணங்களில் நாங்கள் சேர்க்க முடியாது என்றால் சரியல்ல, கடந்த 20.02.2020-ல் பட்டா எண். 737-ல் அப்பொழுது கிராம நிர்வாக அலுவலராக இருந்த கிருத்திகா என்பவர் ராமசாமி கவுண்டர் மகன் பழனியப்பன் மற்றும்

கந்தன் பெயர்களை கூட்டாக சேர்த்துள்ளார். மேற்படி அதற்கான பதிவு ஆவணங்கள் இல்லாமல் கிராம நிர்வாக அலுவலர் தன்னிச்சையாக செய்லபட்டு கூட்டாக பெயர்களை சேர்க்க இயலாது. ஆவணங்களின் அடிப்படையில்தான் அவ்வாறு பெயர்களை சேர்த்திருக்கிறோம்.

16. புல வரைபடத்தில் காட்டியுள்ளபடி பூமியில் பாதையின் அகலம் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 127/2B -ன் உரிமையாளர், பாதையின் கிழபுறத்தில் உள்ள நில உரிமையாளர்களுக்கு ஆவணங்களின் வாயிலாக உரிமையை ஏதேனும் வழங்கியுள்ளாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களில் கூட்டாக நில உரிமையாளர்களை சேர்த்ததே தவறு என்றால் சரியல்ல.

17. சர்வே எண். 127/2B ல் உள்ள பாதை தங்கவேல் கோனார் என்பவருக்கு மட்டும் முழு உரிமையான பாதை என்றாலும், இது கிரய ஆவணத்தின் அடிப்படையில் அவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அந்த ஆவணம் குறித்து எனக்கு ஏதேனும் தெரியுமா என்றாலும் கிரய ஆவணம் குறித்து எனக்கு தெரியாது, ஆனால் அவருக்கு மட்டும் பாத்தியப்பட்ட பாதை இல்லை.

18. சர்வே எண். 127/2B-ல் ஏக்.2.51 நிலம் முழுவதும் தங்கவேல் என்பவருக்கு மட்டும்தான் கிரயம் கொடுக்கப்பட்டது என்றாலும், கிரய ஆவணத்தின்படி மற்ற எவருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் தவறு. எதனடிப்படையில் வருவாய் துறை ஆவணங்களில் தங்கவேல் கோனார் பெயருடன் சேர்த்து மற்றவர்கள் பெயரை கூட்டாக எழுதினோம் என்பதற்கு உரிய நடவடிக்கை தொடர்பான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் கடந்த 1984-ஆம் ஆண்டு UDR திட்டத்தின் மூலம் அனுபவத்தின் அடிப்படையில் ஆவணங்கள் வழங்கப்பட்டன, அதனடிப்படையில் தென்வடலாக செல்லும் சாலையின் கிழக்கில் உள்ள நில உரிமையாளர்கள் அவர்களது நிலத்திற்கு செல்வதற்காக அனுபவத்தின் அடிப்படையில்

தங்கவேல் என்பவரின் பட்டா நிலத்தில் பாதையை ஏற்படுத்திக்கொடுத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

19. UDR திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆவணங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம், அப்பொழுது நான் சிறுபிள்ளை, தற்பொழு நான் UDR திட்டம் குறித்து தெரிந்து கொண்டேன். வருவாய் துறை ஆவணங்களின்படி நாங்கள் பதிவு செய்த இதர நபர்களுக்கு எவ்வித வண்டிப்பாதை உரிமையும், அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல.

1, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

முடிவு நேரம்: 01.28 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.20/2009 , Dt.09.01.2025